கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்


www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2001 - 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 24.03.2013

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (90)

### 90. யக்காவ இராணுவ முகாம்வரை சென்ற எமது இரண்டாவது பயணம்!



நாம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான பயண முயற்சியை ஆரம்பித்த நேரம் இராணுவத்திடமிருந்து யாழ் கோட்டையைக் கைப்பற்றும் புலிகளின் முயற்சியும், புலிகளிடமிருந்து வவுனியா நகரைக் கைப்பற்றும் இராணுவத்தின் நடவடிக்கைகளும் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தன. அதனால் கொழும்புக்கு பல்வேறு அலுவல்கள் நிமித்தம் சென்று திரும்ப முடியாது சிக்கியிருந்த வட பகுதியைச் சேர்ந்தவர்கள் பலர் தமது உறவுகள் சம்பந்தமாக மிகுந்த கவலை கொண்டிருந்தனர். அதுவே அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கிடையிலும் தமது பிரயாண முயற்சிகளை மேற்கொண்டதற்குக் காரணம்.

எமது முதல் முயற்சி பொருள் செலவுடனும் அலைச்சலுடனும் தோல்வி அடைந்திருந்தாலும், தொடர்ந்து முயற்சித்துக்கொண்டே இருந்தோம். இன்று 30 வருடப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, வடக்கு கிழக்கில் வீதிகள் எல்லாம் நவீன முறையிலும் சிறப்பாகவும் செப்பனிடப்பட்டு, புலிகளால் தனித் தீவுகளாகத் துண்டிக்கப்பட்டிருந்த அந்தப் பகுதிகள் நாட்டின் ஏனைய பகுதிகளுடனும், வெளி உலகத்துடனும் சிறப்பான முறையில் ஒன்றிணைக்கப்பட்டுவிட்டது. நாட்டு மக்கள் விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்துக்கு எந்த நேரத்திலும் சென்று வரக்கூடிய சூழல் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளிலிருந்து கொண்டு இலங்கையில் சிங்கள இனவாத எதேச்சாதிகார ஆட்சி நடக்கிறது என்று கதைப்பவர்கள் (இவர்களில் பலர் புலி ஆதரவாளர்கள் என்பது சுவாரசியமான விடயம்) கூட, ஆயிரக்கணக்கில் அங்கு சென்று நல்லூர் திருவிழாவையும் கண்டு களித்து, ஆனைக்கோட்டைப் பனம் கள்ளையும் ஒரு சுவை சுவைத்து, மினிவான் பிடித்து உறவினர்கள் சகிதம் இலங்கை முழுவதையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருகிறார்கள். (திரும்பி வந்த பின்னர் பழக்கதோசத்தில் மீண்டும் இலங்கை அரசையும் சிங்களவர்களையும் வசைபாடுவது வேறு விடயம்!)

யுத்தம் முடிவுற்று ஏறத்தாள நான்கு வருடங்களாகின்ற போதிலும்கூட, இன்றைய இளைஞர்கள் பலருக்கும், புலம்பெயர் நாடுகளில் வாய்ப்பு வசதிகளுடனும் பாதுகாப்பாகவும் தமது தமது குடும்பத்தை வைத்துக்கொண்டு, தமிழீழம் அது இது என்று கூச்சல் போட்டுத் தாய் நாட்டில் வாழும் அப்பாவித் தமிழ் மக்களை மீண்டும் யுத்தத் தீயில் தள்ளிவிடத் துடிக்கும் 'புலம்பெயர் தமிழர்கள்' என்ற புதிய 'தேசிய இனத்'துக்கும் அன்று புலிகளால் ஏற்படுத்தப்பட்டிருந்த ஜனநாயக மறுப்பு, பிரயாணத் தடை, பொருள் தட்டுப்பாடு என்பன தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனால் அந்தக் காலகட்டத்தில் வடக்கு கிழக்கில் புலிகளின் இரும்புச் சப்பாத்தின் கீழ் சிக்கித் தவித்தவர்களின் துன்பியல் வாழ்வைச் சித்தரிப்பது அவசியமாக உள்ளது.

இதற்கு இன்னொரு காரணமும் உள்ளது. இன்று தமிழ் தலைமை கூடிக்குலாவும் ஐக்கிய தேசியக் கட்சிதான் அன்று ஆட்சி அதிகாரத்தில் இருந்தது. அந்த ஐ.தே.கதான் 1977இல் பதவிக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுக்கெதிராக யுத்தத்தை ஆரம்பித்தது என்பதையும் இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்கமாட்டார்கள் அல்லது வசதியாக மறந்துபோய் இருப்பார்கள். அந்த ஐ.தே.கட்சி ஆட்சியுடன் புலிகள் கூடிக்குலாவி இந்திய அமைதி காக்கும் படையை வெளியேற்றிய பின்னர், தமது 'சாணக்கியத்தை' தாமே மெச்சிக்கொண்டு, அந்த ஐ.தே.கட்சி அரசாங்கத்துடன் 'இரண்டாவது ஈழப்போரை'யும் ஆரம்பித்திருந்தனர். இந்த இரண்டு ஏகாதிபத்திய சார்பு வலதுசாரிப் பிற்போக்கு சக்திகளிடத்தில்தான் தமிழ் மக்கள் சிக்கி துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர்.

எனவே எமது இரண்டாவது பிரயாண முயற்சியையும் பற்றியும் இங்கு சொல்வது அவசியமானது.

இம்முறை இரண்டு மூன்று தனியார் பஸ்களில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டோம். ஆனால் வவுனியாவைக் கடந்து செல்வது அங்கு தீவிரமாகப் போர் நடைபெறுவதால் சாத்தியமில்லை என்றபடியால், மதவாச்சி சென்று, அங்கிருந்து மன்னார் சென்று, பின்னர் பூநகரிக்கூடாக அல்லது விடத்தல்தீவிலிருந்து படகுகள் மூலம் யாழ்ப்பாணம் செல்ல முயற்சிப்பது என முடிவாயிற்று.

அதிகாலையிலேயே கொழும்பிலிருந்து புறப்படுவது என முடிவாகி இருந்த போதிலும், எம்முடன் பயணம் செய்பவர்கள் பல இடங்களிலுமிருந்து வந்து சேர நண்பகல் ஆகிவிட்டது. எனவே பிற்பகலில்தான் புறப்பட முடிந்தது.

எமது பஸ்கள் புத்தளம் நகரை அண்மிக்கும்போது பொழுதுசாய ஆரம்பித்துவிட்டது. எனவே இரவு நேரத்தில் பயணத்தைத் தொடர்வது உசிதமல்ல என்ற அபிப்பிராயத்தைப் பலரும் வெளியிட்டனர். அதற்குக் காரணம் நாட்டில் அன்று நிலவிய சூழ்நிலை அப்படி இருந்தது. நாம் புறப்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் அனுராதபுரம், மிகிந்தலை போன்ற பாதைகளில் வைத்து வடக்கு

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
காத்தான்குடி இன்போ
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

டான் யாழ்ஒளி Live from Europe Dan யாழ்ஒளி



புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்

புலம்பெயர் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் தங்களை மனித உரிமைக் காவலர்களைப்போல் காட்டிக்கொள்கிறார்கள்.

கதம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை: கலக்கமான இலங்கைத் தமிழரின் அரசியல் எதிர்காலம்

அரசியல் தீர்வைப் பின்தள்ளும் பிழையான மூலோபாயம்

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை நிறுத்துங்கள்

Thendral Radio

நோக்கிச் சென்ற சில பயணிகள் பஸ்கள் தாக்கப்பட்டிருந்ததுடன், புத்தளத்திலும் சில சம்பவங்கள் நடைபெற்றிருந்தன.



எனவே புத்தளத்தில் இரவு தங்கிச் செல்வது என ஏகோபித்து முடிவு செய்யப்பட்டது. ஆனால் இவ்வளவு தொகையான ஆட்கள் புத்தளத்தில் எங்கு தங்குவது என்பதுதான் பிரச்சினையாக இருந்தது. அத்துடன் எமது பிரயாணத்தின் போது வழியில் இரண்டொரு இடங்களில் எம்மை வழி மறித்து விசாரித்த பொலிசார், நாம் வடக்கு நோக்கிச் செல்வது பாதுகாப்பும் சாத்தியமும் அற்றது என்று தெரிவித்ததுடன், கொழும்புக்குத் திரும்பிச் செல்லுமாறும் அறிவுறுத்தியிருந்தனர். ஆனால் அவர்கள் எம்மை நிர்ப்பந்திக்காதபடியால், நாம் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தோம்.

நாம் எமது தங்குமிடம் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்னரே எமது பஸ்கள் புத்தளம் நகரை அடைந்துவிட்டன. எமது பஸ் சாரதிகளுக்கும், உடன் பயணித்தவர்களுக்கும் புத்தளம் நகரில் சில முஸ்லீம் சகோதரர்களைத் தெரியுமாகையால், அவர்களிடம் சென்று தங்குவதற்கான வசதிகள் குறித்து விசாரித்தனர். ஆனால் அந்த நண்பர்களும் சரி, சில பள்ளிவாசல் நிர்வாகிகளும் சரி எமது நிலை குறித்து அக்றைப்பட்ட போதிலும், வட பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் இன்றைய சூழலில் புத்தளம் நகரில் தங்குவது அவ்வளவு பாதுகாப்பானது அல்ல என்ற கருத்தைத் தெரிவித்தனர். அத்துடன் புத்தளம் பகுதியில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் கற்பிட்டி போன்ற கிராமங்களுக்குச் சென்று அன்றைய இரவைக் கழிப்பது பாதுகாப்பானது என்றும் ஆலோசனை கூறினர்.

ஆனால் கற்பிட்டி போன்ற கிராமங்களில் வாழ்பவர்கள் தமிழ் மக்கள்தான் என்ற போதிலும், வட பகுதித் தமிழர்களுக்கு கிழக்குத் தமிழர்களுடன் உள்ள அளவு தொடர்பு, இலங்கையின் மேற்குப் பகுதியில் வாழும் (மன்னார் பகுதி தவிர்த்து) தமிழர்களுடன் இல்லாதிருந்ததுடன், அன்றைய சூழ்நிலையில் அவ்வாறு திடீரென வட பகுதியைச் சேர்ந்தவர்களை வரவேற்றுத் தங்க வைப்பார்களா என்ற சந்தேகமும் எம்மில் பலருக்கு இருந்தது.

இந்த நிலையில் எம்முடன் பயணம் செய்த கோப்பாயைச் சேர்ந்தவரும், விசுவமடு படித்த வாலிபர் திட்டத்தில் விவசாயம் செய்தவருமான ஒருவர் (அவர் எனக்கும் தெரிந்தவர்) ஒர் ஆலோசனையை முன்வைத்தார். அதாவது தனக்குத் தெரிந்த 'எம்.பி.எஸ்' என்ற பெயருடைய பெரும் வர்த்தகர் ஒருவர் கற்பிட்டிக்குச் செல்லும் வழியிலுள்ள முஸ்லீம் கிராமம் ஒன்றில் இருப்பதாகவும், அவரிடம் சென்று உதவி கோரினால் பெரும்பாலும் உதவி செய்வார் என்றும் கூறினார். ஆனால் அப்பொழுதெல்லாம் இப்பொழுது இருப்பது போன்ற தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத காரணத்தால், முன்கூட்டியே அந்த வர்த்தகருடன் தொடர்பு கொண்டு எமது வருகையை அறிவிக்க முடியவில்லை. எனவே நேரடியாகவே செல்வது என முடிவாயிற்று.

சிறிது நேரப் பயணத்தின் பின்னர் எமது வாகனங்கள் அந்தக் கிராமத்தை அடைந்து, அவரது வீட்டை நோக்கி நாம் சென்றோம். பெரும் தென்னந் தோட்டம் ஒன்றில் அவரது இல்லம் அமைந்திருந்தது. வீட்டிற்கு முன்னால் இருந்த தென்னந் தோட்டத்திற்குள் பெரும் களஞ்சிய சாலைகள் காணப்பட்டன. எம்.பி.எஸ் என்ற பெயருடன் பல லொறிகளும் நின்று கொண்டிருந்தன. இரவு நேரம் என்றாலும் பல வேலையாட்களும் ஓடியாடித் திரிந்து கொண்டிருந்தனர். அந்த வர்த்தகர் கொழும்பிலிருந்த சிகரட், குளிர்பானம், பால்மா போன்றவை உட்பட பல விதமான பிரபல வர்த்தக நிறுவனங்களுக்கு புத்தளம் பகுதிக்கான முகவராக இருந்தார் என்பதை அறிந்து கொண்டோம்.

திடீரென அவரிடம் போய் இறங்கிய எம்மைக் கண்டதும் ஆச்சரியம் அடைந்த அவர், தன்னை நாடி வந்த எம்மை இன்முகத்துடன வரவேற்றார். எமது விசுவமடு நண்பர் சொன்ன விபரங்களை அறிந்து கொண்டு, துரிதமாகச் செயற்பட்டு நாம் அன்றிரவு தங்குவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து தந்தார். எம்முடன் வந்த பெண்களை தனது வீட்டிலேயே தங்குமாறு கேட்டுக் கொண்டார். ஆண்களை தனது வெறுமையாக இருந்த களஞ்சிய சாலைகளில் தங்க ஏற்பாடு செய்தார். தேநீரும் குளிர்பானங்களும் சிற்றுண்டியும் தந்து உபசரித்தார். புத்தளம் பகுதியில் அவர் மிகப்பெரிய வர்த்தகர் என்றபடியால், பொலிசாரின் செல்வாக்கும் அவருக்கு இருந்தது. எனவே அன்றைய இரவை நாம் மிக நிம்மதியாக அவரது இடத்தில் கழித்தோம். அநேகமானோர் இரவு தூங்காமல் பல்வேறு விடயங்கள் குறித்தும் உரையாடுவதிலேயே அன்றைய இரவைக் கழித்தனர்.

இந்தச் சம்பவம் நடைபெற்று சில மாதங்களில்தான் புலிகள் வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை இரண்டு மணித்தியால அறிவித்தலில் உடுத்த துணியுடன் அங்கிருந்து விரட்டியடித்தார்கள். புலிகளின் இந்த காட்டுமிராண்டித்தனமான இனச் சுத்திகரிப்பைப் பற்றி எண்ணும் நேரங்களில் எல்லாம், முன்பின் தெரியாத எமக்கு அன்றிரவு அடைக்கலம் கொடுத்த அந்த முஸ்லீம் வர்த்தகரின் முகம் என் மனக்கண் முன் தோன்றுவது ஒரு வழமையாகிவிட்டது. புலிகளின் இதுவும், இதுபோன்ற மானிட விரோத நடவடிக்கைகள் குறித்தும், இந்த மேற்குலக 'மனித உரிமைக் காவலர்கள்' என்றுதான் கவனத்தில் எடுக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

அடுத்த நாள் காலை எமக்கு அடைக்கலம் தந்து சகல வழிகளிலும் உதவி புரிந்த அந்த முஸ்லீம் வர்த்தகருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், அவரது பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துவிட்டு எமது பயணத்தை வடக்கு நோக்கித் தொடர்ந்தோம். மக்கள் பெருமளவில் கூடும் நகரங்களில் எமது வாகனங்களை நிறுத்தாது பிரதான வீதியில் பிரயாணிகளுக்கென தனியான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தேநீர்க் கடைகளில் மட்டும் சிற்றுண்டி சாப்பிடுவதற்கும், தேநீர் அருந்துவதற்குமாக எமது வாகனங்களை நிறுத்தினோம். அதிலும் அதிக நேரம் தரித்து நிற்காது விரைந்து எமது தேவைகளை

முடித்துக் கொண்டு புறப்பட்டோம்.

நண்பகல் அளவில் மதவாச்சி நகரைக் கடந்து மன்னார் வீதியில் பயணித்து யக்காவ என்ற இடத்தை அடைந்தோம். எமது வாகனங்கள் மட்டுமின்றி வேறும் சில வாகனங்கள் மன்னார் நோக்கிச் செல்வதைக் கண்டோம். சிலர் நடந்தும் சென்று கொண்டிருந்தார்கள். நாம் யக்காவ இராணுவ முகாமை அடைந்தபோது, ஏற்கெனவே பல வாகனங்கள் அங்கு சென்றடைந்திருப்பதைக் கண்டோம். அவற்றில் பயணம் செய்த மக்கள் தெருவோரங்களிலும், மர நிழல்களிலும் குழுமி நின்றனர்.



அந்தப் பிரதேசம் எனக்கு ஓரளவு பரிச்சயமானது என்றபோதிலும் அங்கு ஓர் இராணுவ முகாம் முன்னர் இருந்ததாக ஞாபகம் இல்லை. அந்தப் பகுதிகளுக்கு நான் வவுனியாவில் 1970களின் ஆரம்பத்தில் எமது கம்யூனிஸ்ட் கட்சி வேலை செய்த காலங்களில் சென்று வந்திருக்கிறேன். யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் மாங்குளம் என்ற ஓர் ஊர் இருப்பது போல, மதவாச்சி - மன்னார் வீதியிலும் மாங்குளம் என்றொரு கிராமம் இருக்கிறது. அங்குள்ள நேரியகுளம் என்ற கிராமத்தில் யாழ் ஓட்டுமடத்தைச் சேர்ந்த ஒரு தோழருக்கு பல உறவினர்கள் இருந்ததால், எமக்கு அதன்மூலம் சில அரசியல் தொடர்புகள் அந்தப் பகுதியில் இருந்தன.

அத்துடன் பாவற்குளத்தில் எமது கட்சியைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை, அபயரத்தின போன்ற தோழர்களும், எமது விவசாய சங்கமும் இருந்ததால் நான் அங்கும் சென்று வருவதுண்டு. மதவாச்சி - மன்னார் வீதியில் அமைந்துள்ள செட்டிகுளத்தில் மட்டுவிலைச் சேர்ந்த அப்போதைய எமது தோழர் பாலு (பின்னர் அவர் மூர்த்தி என்ற பெயரில் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்தவர். பின்னர் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த தமிழ் செல்வனின் சொந்த அண்ணன்) ஒரு சிகையலங்கரிப்பு நிலையத்தை நடாத்தி வந்ததால் அவரிடமும் சில வேளைகளில் செல்வதுண்டு.

யக்காவ இராணுவ முகாமில் இருந்த அதிகாரிகள் எமது வாகனங்களை அதற்கு அப்பால் போக விடுவதாக இல்லை என்ற சேதி எமக்குக் கிடைத்தது. எமது வாகனங்களின் சாரதிகளும், அதில் பயணம் செய்த சில பிரமுகர்களும் இராணுவ முகாம் அதிகாரிகளுடன் பல தடவைகள் பேசியும் அவர்கள் அசைவதாக இல்லை. எம்முடன் வந்த சிலர் முகாமுக்கு வெளியே காவலுக்கு நின்ற சில சிப்பாய்களிடம் சென்று இரகசியமாகக் கதைத்து பணம் தருவதாகவும், எம்மைப் போக அனுமதிக்குமாறும் 'அலுவல்' பார்த்தும் ஒன்றும் சரிவரவில்லை.

அந்தக் கிராமத்தில் முழுக்க முழுக்க சிங்கள மக்களே குடியிருந்தனர். அருகே தமிழ் கிராமங்கள் இருந்ததால், அவர்களில் பலர் தமிழ் பேசக் கூடியவர்களாக இருந்தனர். எல்லோருமே வறிய விவசாயிகள். பெரும்பாலானவர்கள் தமது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்துகொண்டு, காடுகளைப் புதிதாக வெட்டி சேனைச் செய்கையிலும் ஈடுபட்டு வந்தனர். அவர்களிடம் பெரிதாக இனவாதப் போக்குகள் காணப்படவில்லை. வேடிக்கை பார்ப்பதற்காக அவாகளில் பலர் அங்கே குழுமியதுடன், எமது தாகத்துக்கு தண்ணீர் தந்தும் உபசரித்தனர்.

எம்முடன் வந்த அல்லைப்பிட்டியைச் சேர்ந்த ஒருவர் 1958 இனக் கலவரத்துக்கு முன்னர் தாம் மதவாச்சி நகரில் கடை வைத்திருந்ததாகவும், அப்பொழுது இந்த யக்காவ கிராமம் தமிழ் மக்களுடைய கிராமமாக இருந்ததாகவும் ஒரு தகவலை எம்மில் சிலருக்குக் கூறினார். அவர் சொன்னது சில வேளைகளில் உண்மையாக இருக்கலாம். ஏனெனில் நான் கிளிநொச்சியில் கட்சி வேலை செய்தபோது அடிக்கடி தருமபுரம் கிராமத்திற்குச் செல்வதுண்டு. முழுக்க முழுக்க கூலி விவசாயிகள் நிறைந்த அந்தக் கிராமத்தில் எமக்கு நிறையத் தோழர்கள் இருந்தனர்.

அந்தக் குடியேற்றத் திட்டக் கிராமம் 1958 இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு அனுராதபுரம், மதவாச்சி போன்ற இடங்களிலிருந்து வந்தவர்களால் உருவாக்கப்பட்டது. தருமபுரம் கிராமத்தில் வசிப்பவர்கள் முழுக்க முழுக்க இந்திய வம்சாவழியினர் என்றும், அவர்கள் மலையகத்திலிருந்து வந்தவர்கள் என்றும் தவறான ஓர் அபிப்பிராயம் நிலவுகிறது. அது உண்மையல்ல. அவர்களில் பெரும்பாலோர் 1958 இனக் கலவரத்தின் பின்னர் வட மத்திய மாகாணத்திலிருந்து கொண்டுவரப்பட்டுக் குடியேற்றப்பட்டவர்கள். அதுமாத்திரமல்லாமல் அவர்களில் சிலர் மிக நீண்ட காலத்துக்கு முன்னர் வடக்கிலிருந்து சென்று அனுராதபுரம் போன்ற இடங்களில் குடியேறியிருந்த மக்கள். (யாழ்ப்பாணிகள்)

பருத்தித்துறையைச் சேர்ந்த எனது உறவினர்கள் சிலர்கூட அனுராதபுரத்தில் சினிமா கொட்டகை (சிற்றம்பலம் தியேட்டர்), கடைகள் என வைத்துக்கொண்டு; சிறப்பாக இருந்ததாக எனது பெற்றோர்கள் சிறுவயதில் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்களில் ஒருவர் அனுராதபுரம் நகரசபைத் தலைவராகவும் இருந்திருக்கிறார்! அவரது முயற்சியாலேயே அனுராதபுரம் விவேகானந்தா வித்தியாலயமும், அதற்கு அருகிலுள்ள கதிரேசன் கோவிலும் உருவாக்கப்பட்டதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். சிங்கள மக்கள் ஒரு தமிழரைத் தமது நகரசபைத் தலைவராக ஏற்கும் அளவுக்கு அந்தக் காலத்தில் தமிழ் - சிங்கள உறவு இருந்திருக்கிறது என்பதையும், சுதந்திரத்துக்குப் பின்னர் இரு பக்கத்திலுமிருந்த குறுகிய நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளால் அது சிதைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நினைக்க வேதனையாக இருந்தது.

நாம் எவ்வளவோ முயன்றும் இராணுவத்தினர் யக்காவ இராணுவ முகாமுக்கு அப்பால் எம்மை ஓர் அடி தன்னும் நகர அனுமதிக்கவில்லை. இந்த நிலைமையால் எனக்கு மீண்டும் கவலையும் சோர்வும் தொற்றிக் கொண்டது. கர்ப்பிணியான எனது மனைவியைப் பற்றிய கவலை வேறு என்னை வாட்டியது. பெரும்பாலும் கிராமத்திலேயே வாழ்ந்து பழகிய அவர், என்னை நம்பியே யாழ்ப்பாண நகர வாழ்க்கைக்கு

வந்திருந்தார். என்னைப் போல இலங்கை முழுவதும் சுற்றித் திரிந்த அனுபவம் மட்டமல்லாமல், கிளிநொச்சிக்கு அப்பால் சென்ற அனுபவம்கூட அவருக்கு இல்லை. அவர் ஒரு 'நிலக்கிளி'.

இதற்கிடையில் அங்கு குழுமியிருந்த சிங்கள கிராமவாசிகளில் ஒருவர் ஒர் ஆலோசனையை எங்களில் சிலரிடம் இரகசியமாகக் கூறினார். அதாவது அந்தக் கிராமத்தின் வடக்குப் புறமாக வயல்களும் காடும் இருக்கிறது. அதற்குள்ளால் சில மைல்கள் கால் நடையாகப் பயணம் செய்தால், யக்காவ முகாமுக்குப் போகாமல் வவுனியாவின் சில கிராமங்களுக்கோ, மன்னார் வீதியில் இருந்த சில கிராமங்களுக்கோ போகலாம் என்பதுதான் அவர் சொன்ன யோசனை. அவ்வாறு எம்மைப் பாதுகாப்பாகக் கூட்டிச் செல்வதற்கு தான் சிலரை ஏற்பாடு செய்வதாகவும், அவர்களுக்கு சிறிது பண உதவி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

முன்னர் பலரை இராணுவத்துக்குத் தெரியமல் அவ்வாறு அழைத்துச் சென்று விட்டதாகவும் கூறினார். எமக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக இராணுவத்தினர் சிலருக்கும் இந்த விடயம் தெரியுமென்றும், அவர்கள் கண்டும் காணாமல் விடுவதற்காக அவர்களுக்கு 'சம்திங்' கொடுப்பதாகவும் சொன்னார்.

அவரது யோசனை எமது மனதில் ஒரு நப்பாசையையும் சலனத்தையும் ஏற்படுத்தியது. அதேவேளை பயத்தையும் உருவாக்கியது. தற்செயலாக அவ்வாறு செல்கையில் இராணுவத்திடம் அகப்பட்டால், எம்மீது புலி முத்திரை குத்தப்பட்டு சுடுகாட்டுக்கு அனுப்பப்படுவோம் என்பது நிச்சயம். அத்துடன் எம்மைக் கூட்டிச் செல்பவர்கள்கூட அந்தக் காட்டுப்பாதையில் வைத்து எமக்கு ஏதாவது செய்துவிட்டு, எம்மிடம் உள்ள பணத்தையும் பொருட்களையும் கொள்ளையடித்துச் செல்லலாம் என்ற அச்சமும் இருந்தது. எனவே அந்த யோசனையை முற்றிலுமாக நிராகரித்து விட்டோம்.

எமது பயண முயற்சி யக்காவ இராணுவ முகாமுக்கு அப்பால் நகர்வதற்கு வாய்ப்பில்லாத சூழ்நிலையில் எமது வாகனங்கள் மீண்டும் கொழும்புக்குத் திரும்பத் தீர்மானித்தன. பிற்பகலில் நாம் புறப்பட்டோம்.

இந்தப் பயணங்களின் போது புதிதுபுதிதாக பலரின் அறிமுகம் கிடைத்தமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. இந்த இரண்டாவது பயணத்தின் போது சிதம்பரநாதன் என்ற ஒருவரின் அறிமுகமும் நட்பும் கிடைத்தது. நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், பூநகரியில் திருமணம் செய்து அங்கு வாழ்ந்து வந்தார். அதேநேரத்தில் ஒட்டிசுட்டான் - முத்தையன்கட்டு படித்த வாலிபர் குடியேற்றத்திட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீரிறைக்கும் இயந்திர இயக்குநராகப் பணிபுரிந்து வந்தார். எனக்கு ஏற்கெனவே நெடுந்தீவிலும் பல குடியேற்றக் கிராமங்களில் வாழ்ந்த அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் மத்தியிலும் பல தோழர்களும் நண்பர்களும் இருந்ததால், அவருடன் வெகு விரைவிலேயே நட்பு ஏற்பட்டுவிட்டது.

எமது வாகனங்கள் முன்னிரவு நேரத்தில் புத்தளம் நகரை அடைந்தன. அன்றிரவு அங்கு தங்கிவிட்டு காலையில் பயணத்தைத் தொடரலாம் என எண்ணினோம். ஆனால் எங்கு தங்குவது என்ற பிரச்சினை மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. அங்குள்ள கடைகளில் இரவு உணவு அருந்திய பின் ஒரு கடைக்காரரிடம் ஆலோசனை கேட்டோம். முதல் நாள் இரவும் சில தமிழர்கள் காடையர் கூட்டத்தால் தாக்கப்பட்டதாக அவர் சொன்னார். சற்றுத்தள்ளி ஒரு பிள்ளையார் கோவில் இருப்பதாகவும், அங்கு சென்று தங்குவது சற்றுப் பாதுகாப்பாக இருக்கம் என்று அவர் ஆலோசனை கூறினார். அவரிடம் வழியைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அங்கு பயணமானோம்.

அந்தக் கோவில் அவ்வளவு பெரிய கோவில் அல்ல. ஆனால் நல்ல முறையில் பராமரிக்கப்படுவது தெரிந்தது. தண்ணீர் பெறுவதற்கு வசதியாக கிணறு ஒன்றும் இருந்தது. கோவிலுக்கு அருகே ஓடை ஒன்றும் இருந்ததாக ஞாபகம். நாம் அங்கு சென்று தங்கினாலும் இரவில் ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சத்துடனேயே அன்றிரவைக் கழித்தோம். அதனால் அன்றிரவு எம்மில் பலர் தூங்காமலேயே இருந்தோம்.

அதிகாலையிலேயே முகம் கழுவிக் கொண்டு கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். அங்கு சென்றதும் நானும் நண்பர் சிதம்பரநாதனும், அவரது ஆலோசனைக்கிணங்க மருதானைக்குச் சென்று முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான சற்று மலிவு வாடகையிலான விடுதி ஒன்றில் தங்கினோம்.

அடுத்த நாள் காலை வழமையாக நாம் கூடும் பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலுக்குச் சென்று மீண்டும் யாராவது பயண முயற்சிகளைச் செய்கிறார்களா என ஆராயத் தொடங்கினோம்.

தொடரும்

முன்னைய பதிவுகள்